1972 டிசம்பர் 4]

பொருளாதார நிபுணர்களின் கருத்து. அகில இந்திய ரீதியிலே பார்த்தால் தமிழ் நாடு தொழில் வளர்ச்சியில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்று இருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, எந்த எந்தத் தொழில்களுக்குக் கடன் வசதிகள் கொடுக்கப்படுகின்றன என்பதைப்பற்றிய தெளிவான ஒரு பட்டியல் இல்லாத குறைபாடு இருக்கிறது. அதை மாற்றியமைத்தாவது ஒரு முழுமையான பட்டியலை அமைத்து வெளியிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி ஒரு குறைபாடு இருப்பதாகத் தெரியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும், இந்தத் துறையின் மானியம் இங்கே விவாதத்திற்கு வந்தபொழுது தொழில் துறை பற்றிய பல்வேறான கடன் வசதிகளையும் கடன்வசதிகள் அளிக்கின்ற நிறுவனங்கள்பற்றிய விவரங்களையும் அங்கத்தினர்கள் பொதுமக்களுக்குத் தெரியப் படுத்தி அரசாங்கத்தினுடைய உதவியைப் பெறவேண்டுமென்று எடுத்துச் சொன்னேன். அதை மீண்டும் இன்றைக்கு நினைவுபடுத்துகிறேன்.

Sales Centre of Small Industries Corporation

• 31. *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the **Minister** for Industries be pleased to state—

(*a*) whether any sales counter has been opened by Tamil **Nadu Small Industries Corporation Limited in Madras City in April 1972; and**

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 21—4—1972-ஆம் நாளன்று தமிழ்நாடு சிறு தொழில்கள் நிறுவனம் ஆயிரம் விளக்கு பகுதியில் அண்ணா சாலையில், 4/141 என் இடத்தில் ஒரு "விற்பனை நிலையம்" திறந்துள்ளது. 21—4—1972-லிருந்து 24—6—1972 வரை விற்பனையான தொகை ரூ. 45,995.91 (ரூபாய் நாற்பத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஐந்தும், புதிய காசுகள் தொண்ணூற்றொன்றும்).

Railway line in Nilgiris district

• 32. *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the **Minister for Public Works be pleased to state whether this Government have represented to the Centre during 1972 not to dismantle the mountain railway in Nilgiris district?**

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இந்த இரயில் பாதைகளை நீடித்து இருக்கவேண்டியதின் அவசியத்தையும் அவற்றை மேம்படுத்த வேண்டியதின் அவசியத்தையும் ஆதாயமில்லாக் கிளை ரயில் பாதைகள் பற்றி ஆய்வு செய்ய இந்திய அரசு 1969-ல் அமைத்த குழுவிடம் இவ்வரசு வலியுறுத்தியுள்ளது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, இப்பொழுது இந்த இரயில்பாதையிலே ஒரு இடத்திலே சரிவு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா ? அப்படியென்றால் அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. ஆனால் நம்முடைய பாதையிலே ஏற்பட்ட சரிவைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, at the time of the inauguration of the Bangalore-Salem railway line at Bangalore, the Central Railway Minister said that the Central Government wanted to convert metre gauge lines into broad guage lines and in that the Salem-Bangalore line also would be considered. May I know whether this Government have received any communication from the Centre on this matter or this Government has recommended to the Centre to convert it into Broad Guage?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபோன்ற ஒருகுறிப்பு மத்திய அரசாங்கத்திடமிருந்து நமக்கு வரவில்லை. மத்திய அமைச்சர் சொன்னதைப் பத்திரிகைகளிலே பார்த்ததுதானே தவிர அரசாங்கத்திற்குத் தகவல் வரவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தமிழகத்தில் எந்தெந்த இருப்புப் பாதைகளை நீக்கிவிட வேண்டுமென்று மத்திய அரசாங்கம் யோசித்து வருகிறது என்பது நமது அரசுக்குத் தெரியுமா ? அவைகளை நீக்க வேண்டாமென்பதற்கு அரசு எடுத்த முயற்சிகள் என்ன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தமிழ்நாட்டின் எல்லைக்குள் உள்ள கீழ்க்காணும் பாதைகள் ஆதாயமில்லா கிளைப்பாதைகளாகக் கருதப படுகின்றன :—

மேட்டுப்பாளையம்—உதகமண்டலம்.

மதுரை—போடி நாயக்கனூர்.

மாயூரம்—தரங்கம்பாடி.

1972 டிசம்பர் 4]

பேரளம்—காரைக்கால்.
நீடாமங்கலம்—மன்னார்குடி.
வாலாஜாசாலை—இராணிப்பேட்டை.
விழுப்புரம்—புதுச்சேரி.
திருநெல்வேலி—திருச்செந்தூர்.
சேலம்—மேட்டூர் அணை.

இந்தப்பாதைகள் ஆதாயமில்லா கிளைப்பாதைகளாகக் கருதப்படுகின்றன. இவைகளை எடுக்கக்கூடாது என்று மத்திய அரசுக்கு நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் வலியுறுத்தியிருக்கிறோம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, மாயூரத்திலிருந்து தரங்கம்பாடி செல்லும் இருப்புப் பாதை போதிய வருமானம் தராததால் அதை அகற்றிவிடலாம் என்றும், அந்த இருப்புப்பாதை தற்போதுள்ள இடத்தில் பேருந்துகள் விடுவதற்கான பாதையை அமைக்க மத்திய அரசு ஒத்துக் கொள்வதாகவும் சில நாட்களுக்கு முன்னால் பத்திரிகையில் வந்திருந்ததாக அறிகிறேன். ஆகவே அந்த இருப்புப்பாதையை நீக்கியபிறகு சோழன் போக்குவாத்தை விடுவதற்கு மத்திய அரசைக் கோருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றிய விவரம் தற்பொழுது என்னிடத்தில் இல்லை.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் படித்த பட்டியலில் வாலாஜா—இராணிப்பேட்டை இரயில்வே லயனை எடுக்கப்போவதாக செயற்குறிப்பு இருந்ததாகத் தெரிவித்தார்கள். இராணிப்பேட்டை பாரி அண்ட் கம்பெனி உள்ள இடம், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் உள்ள இடம், வியாபாரத்திற்கு மையமான இடம். ஆகவே, நிச்சயமாக இந்தப் பாதையை அகற்றக்கூடாது என்று மத்திய அரசுக்கு நம்முடைய அரசு மீண்டும் ஒரு கடிதம் எழுதுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் ஆதாயமில்லாத கிளைப்பாதைகளாகக் கருதப்படுகின்றன, அவைகளை எடுத்துவிட வேண்டுமென்ற எண்ணமிருப்பதாகத் தெரிவித்தபிறகு மத்திய அமைச்சர் தலைமையில் குழு அனுப்பப்பட்டது. இக்குழுவின் தலைவர், எந்த ஒரு இரயில் பாதையையும் பிரிப்பது தங்களது நோக்கமல்ல என்றும் அவற்றால் ஏற்படும் விரயத்தைக் குறைப்பதற்கு என்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பதுபற்றியும் ஆய்வதே தங்களது நோக்கமாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைத் தொடர்ந்து நம்முடைய அரசு மத்திய அரசுக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறது. பதிலை எதிர்பார்க்கிறோம்.